Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ ஆனி௴ ௧௮௳ (2-7-39) { இல. 35

இலக்ஷ்மி எங்கிருப்பாள்?

[அ. ஆ.]

I

" அதிகாலையில் எழுந்தவுடன் படுக்கையைச் சுருட்டி வைக்கவேண்டும். எப்போதும் துணி மணிகளைக் கண்ட கண்ட இடங்களில் போட்டுவிடாமல் குறிப்பிட்ட ஓரிடத்தில் மடித்து வைக்கவேண்டும். இப்படியெல்லாம் சோம்பல் சிறிதுமின்றிச் சுறுசுறுப்பாகவும் ஒழுங்காகவும் இருந்தால் வீட்டில் லக்ஷ்மி வாசஞ்செய்வாள்; வீடும் களைபொருந்தியதாக விளங்கும். இவ்வாறெல்லாமில்லாமல் சோம்பல்தனம் மிகுந்து இருந்தால் மூதேவி வந்துவிடுவாள்..." இப்படி எனது அன்னை நான் சிறுவனாயிருந்தகாலத்தில் பலமுறை சொல்லிவந்தாள். அவள் சொன்ன எல்லாவற்றிலும் "மூதேவி வந்துவிடுவாள்; லக்ஷ்மி வரமாட்டாள்; லக்ஷ்மி வந்தால் சகல மங்களங்களும் பெருக உண்டாகும்" என்று மிக மனஉருக்கத்தோடும் சொன்னதுமட்டும் என் மனதில் தைத்தது. ஒருசமயம் என் அன்னையிடம் "லக்ஷ்மி, மூதேவி என்கிறாயே, அவர்கள் யார்? நம் இஷ்டம்போல நாம் சுதந்திரமாய் நடந்தாலென்ன? படுக்கையைச் சுருட்டி வைக்கத்தான் வேணுமோ? சுருட்டி வைக்காவிட்டால்? துணிகளை...." என்று நான் சற்று வேகத்துடன் பேசி முடிக்குமுன் என் தாயார் குறுக்கிட்டுச் சொன்னாள்: "அப்பா, அப்படிச் சொல்லாதே; இப்படியெல்லாம் பேசக்கூடாது. லக்ஷ்மியிருக்குமிடம் குதூகலம் நிரம்பி மங்களகரமாய் விளங்கும்...."

"ஒரு காலத்தில் ஓர் ஊரில் ஒரு குடியானவனிருந்தான். அவன் நன்னடத்தையுடையவன். வயலில் வேலை செய்து அதனால் வருவதைக்கொண்டு குடும்பத்தை ஒழுங்காக நடத்தி வந்தான். அவன் மனைவியும் நல்ல ஒழுக்கமுடையவள். அதிகாலையில் கணவன் எழுமுன் எழுந்து வீட்டைப் பெருக்கி, நீர் தெளித்துக் கோலமிட்டு, காலையிலேயே குளித்துவிட்டு, முன்னமேயே சுத்தப்படுத்தப்பட்ட அடுப்பில் சமையல் செய்வாள். வெள்ளி, செவ்வாய்களில் வீட்டை மெழுகுவது, விளக்கேற்றும் சமயத்தில் திருவிளக்கேற்றி அதற்குக் குங்குமம், புஷ்பம் இவை அணிந்து அதைப் பூசிப்பது, தன்னால் இயன்ற பிச்சை இடுவது, எறும்புப் புற்றுகளைத் தேடிக் கண்டுபிடித்து அவற்றில் குறு நொய்யரிசி போடுவது—என்பன போன்ற பல நல்ல ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து ஒழுகி வந்தாள். அவள் முக்கியமான ஒரு வழக்கத்தை எப்போதும் தவறாது ஒரு விரதம் போற் கொண்டு செய்துவந்தாள். அதாவது: தினந்தோறும் மதியச் சாப்பாடு தயாரானதும் சிறிது அன்னத்தைக் காகத்திற்கு இடுவது. காகத்திற்கு அன்னமிடாமல் ஒருநாளும் சாப்பிடுவதில்லை.

"அந்த நாட்டு அரசனுக்கு ஒரே மகள் இருந்தாள். அவள் ஒருநாள் வழக்கம்போல் மத்தியான வேளையில் குளிக்கச் சென்றாள். (இவர்கள் போன்றவர்கள் மதியத்திற்றானே குளிப்பார்கள்.) குளித்துவிட்டுக் குளத்தினின்றும் வெளிவந்தபோது தான் அருமையாகப் பாராட்டித் தன் உயிரேபோற் போற்றிவந்த தன் முத்து மாலையைக் காணாது அங்குமிங்கும் தேடிப் பார்த்தாள். எங்கும் காணாமல் மனம் நொந்தாள். ஒன்று காணாமற் போனபின் வீணே நொந்து பயனென்ன? இராஜகுமாரி அந்தப்புரத்தைப் போய்ச் சேர்ந்தாள். சேர்ந்தபோது இராணி தன் மகள் கழுத்தில் முத்துமாலை இல்லாதிருக்கக்கண்டு மனம் திடுக்கிட்டு உற்று நோக்கினாள். ஆம்! முன்பு ஜோதிஷன் எதைப்பற்றி மிக்க ஜாக்கிரதையாக இருக்கச்சொன்னானோ, எது காணாமற் போனால் அது தொலைந்த சிறிது காலத்திற்குள் அரசகுமாரியின் உயிர் நீங்கிவிடுமென்று சொல்லி எச்சரித்தானோ அந்த முத்துமாலைதான் கழுத்திலில்லை. இராணியின் மனத்துயர் அளவிலதாயிற்று. அவ் வருத்தத்தைப் பெரிதும் வெளிக்காட்டிக்கொள்ளாமல் தன் மகளை நோக்கி "முத்து

(தொடர்ச்சி 276-ம் பக்கம் பார்க்க).

காலை உயிர் என்னுங் கலாதிகள்சேற் சோபல், சீருடன் எய்மைத் தெளிந்துகொள்வ தெங்ஙனோ.

பூரண சந்திரோதயம்

இருண்ட கறுத்த மேகங்களுக்கிடையே செவ்வானம் படர்ந்துகொண்டு வருகின்றது. சூரியன் பொன்னிறமடைந்து மேற்றிசை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறான். புதிய பெரிய உக்கிரரூபங் கொள்கின்றான். செம்மேகங்களுக்கூடாகச் சென்று அஸ்தமன கிரியை நண்ணுகின்றான். உலகெங்கணும் இருள் கவிகின்றது. இக்காட்சியையே "சூரியனுடைய சிங்கம் தான் தங்குமிடத்துக்கு வருகின்றது. தான் தங்குமிடத்தில் மேகங்களாகிய யானைக்கூட்டத்தைக் காண்கின்றது. தன்னிருப்பிடத்திற்கு அவைகளை 'யார் வரச்சொன்னது' என்று கோபித்து ஒரு யானையின் மத்தகத்திற் பாய்ந்துகடித்து இரத்தத்தை உறிஞ்சுகிறது. அப்போது யானையிலிருந்து இரத்தம் சுவறி ஆகாயமெங்கும் பரவிச் செந்நிறமடைகின்றது" என ஒரு புலவரும். "மேற்குப்பெண், சூரியன் தன்னை நண்ணுவதைக் கண்டு, கிழக்குப்பெண்ணாகிய சோரநாயகியிடம் இவ்வளவுமிருந்துவிட்டு இங்கேன் வருகின்றாய் எனக் கோபித்துத் தன் நாயகன் என்றும் பாராமல், சூரியனை உதைகின்றாள்; சூரியன் கீழே விழுந்து மண்டையுடையப்பெறுகின்றான்; உடனே தலையிலிருந்து இரத்தம் பீறிட்டுப்பாய ஆகாயம் செந்நிறமடைகிறது" எனவொரு கவிவாணரும் வர்ணித்திருக்கின்றனர். பின்னர், உலகத்தை இருள் என்னும் போர்வையாற் போர்க்க விரும்புபவன் போலவும், பாலைவனங்களுக்கூடாக வந்தமையால் வெப்பம் தாங்கமாட்டாது குளிக்கப்போகிறவன் போலவும், மேற்குக் கடலில் மூழ்குகின்றான்.

சந்திரன் பொன்னிறத்துடனும், வட்டவடிவத்துடனும் கீழைத்திசையில் உதயமாகின்றான். அத்துடன் நட்சத்திரங்களும் ஜொலிக்கின்றன. இக்காட்சியை 'மன்மதனது திருவிழாவுக்காக வைக்கப்பட்ட வெள்ளிப் பூரண கும்பம் போல, நிலவைக்காலுகின்ற சந்திரன், கிழக்குத் திசையிற் தோன்றினன்; காடெங்கும் பூத்திருந்த முல்லைப் புஷ்பங்கள், ஆகாயத்துக்கு எழுந்து சென்றன போல், ஆகாயமெங்கும், பிரகாசிக்கின்ற நட்சத்திரங்கள் நிரையாக உதயமாகின.' என்னும் பொருள் படும்படி, மகாபாரதத்தில் ஓரிடத்திலே,

"கானெலாம் மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரைநிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்த வெள்ளி வெண்கும்ப மென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா"

என்று வில்லிபுத்தூராழ்வார் கூறுகின்றார். இன்னொருபுலவர், "மாலைக்காலம் என்னும் பெண்ணுக்கும் இருள் என்னும் ஆடவனுக்கும் விவாகம் நடப்பதற்காக வைக்கப்பட்ட பூரண கும்பம் போலச் சந்திரன் தோன்றுகின்றான். இவ்விவாகத்துக்காக வைக்கப்பட்ட பூரண கும்பம் போல் நட்சத்திரங்கள் தோன்றுநிற்கின்றன" என்று கூறியிருக்கின்றார். மாலைக்காலம் என்னும் பெண்ணெறிந்த பந்துபோல விண்வளர் குபேரனாகிய சந்திரன் ஆகாயத்திற் செல்லுதலும் நட்சத்திரங்கள் ஒளிருகின்றன. செந்தாமரை மலர்கள் நிறைந்த தடாகத்தில் வெள்ளன்னம் நீந்திச்செல்வது போல் நட்சத்திரங்கள் நிறைந்த ஆகாயத்துக்கூடாகச் சந்திரன் செல்கின்றது.

சந்திரன் உதயமாகியவுடன் நிலவு எங்கும் பரவுகின்றது. இருள் எங்கேயோ ஒழித்துக்கொள்கிறது. இன்பந்தரக்கூடிய குளிர்ச்சியான நிலவைத்தருகிறான். சந்திரனென்பவன் கூலி வாங்காது வெள்ளையடிப்பவனைப் போல் நிலவையெங்கும் எறிக்கின்றான். சகோதரப்பறவைகள் நிலவைப்பருகுகின்றன. 'ஆகாயமாகிய பசு, சந்திரமடியிலிருந்து நிலவாகிய பாலைச் சொரிய, அதனைச் சகோதரப்பட்சிகள் இன்பத்துடன் பருகுகின்றன.' என்று ஒரு புலவர் இந்நிகழ்ச்சியைக் கூறுகின்றார். சந்திரன் நிலவையெறிக்கின்றான். மரங்களின் கீழுள்ள கருநிழல்கள் அசைகின்றன. 'சந்திரனாகிய தலைவன் இருளாகிய அரக்கனை நிலாவாகிய வாள் கொண்டு வெட்டிவிட, கரு நிழலாகிய முண்டங்கள் துடிக்கின்றன' என்று கருநிழலசைவது உவமிக்கப்பட்டது. மேகங்கள் இடையிடையே சந்திரனை மறைக்கின்றன. நாம் நிலவு போய்விட்டதே யென்று குறை கூறுகின்றோம். உள்ளத்தை ஆணவம் மறைப்பது போலச் சந்திரனை மேகம் மறைக்கிறது. இரவின் அந்தகாரம் சந்திரன் வயிற்றில் நின்றது போலவும், உலகில் எவர்க்கும் குறை யுண்டென்பதை அறிவிப்பவன் போலவும், சந்திரனென்பவன் தன்னகத்தேயும் களங்கத்தை வைத்திருக்கிறான். சந்திரனில் களங்கம் தோன்றுவதைச் 'சந்திர கல்லில் உரைத்த சந்தனம் போலச் சந்திரனும், அதில் ஊற்றிய கஸ்தூரி போல மறுவும் தோற்றுகின்றன' என ஒரு புலவரும், 'ஆகாயமாகிய பாற்கடலில், சந்திரனாகிய ஆலிலையின் கண் களங்கமாகிய விஷ்ணு யோக நித்திரை செய்கின்றார்' எனவொரு புலவரும் வர்ணித்திருக்கின்றனர்.

பட்சிசாலங்கள், தத்தம் குடந்தைகளை நோக்கி மிக அலங்காரமாகப் பறந்து செல்கின்றன. காடு, புல்வெளிக்குச் சென்றிருந்த பசுக்கள், தம் கன்றுகளுக்குப் பால் கொடுப்பதற்காக எஜமான் வீடு வந்து சேருகின்றன. வந்ததும் தம் கன்றுகளுக்குப் பாலை யூட்டுகின்றன. தொழிற்றுறைகட்குச் சென்றிருந்த மனிதர்கள் வீடு திரும்புகின்றனர். வயல்களில் வேலை செய்துகொண்டிருந்த உழவர்கள் களைப்புடனும் அழுக்குடனும் வீடு திரும்புகின்றனர். ஆந்தை முதலியன இது தங்களுக்குச் சந்தோஷ காலமென்று வெளிக்கிளம்புகின்றன.

பெண்கள் வீடுகளெங்கும் மங்கள தீபங்கள் ஏற்றுகின்றனர். தேவாலயங்களில் நித்திய நைமித்தியத்திற்காக மணிகள் சப்திக்கின்றன. வெண் சங்குகள் முழங்குகின்றன. நாதஸ்வரங்கள் ஊதப்படுகின்றன. மேளங்கள் அடிக்கப்படுகின்றன. பிராமணர்கள் வேத கோஷம் செய்கின்றனர். அச்சத்தம் எங்கும் பரவுகின்றது. தீபங்

வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலாமை, நான்கெடுத்துத் தேடாமல் நன்கறிவ தெங்காளோ.

கள் ஜகஜ்ஜோதியாய்ப் பிரகாசிக்கின்றன. பக்தர்கள் ஆனந்த பக்த பரவசத்தர்களாகி நிலத்தில் விழுகின்றார்கள். கடவுளை சாஷ்டாங்கமாய் நமஸ்கரிக்கின்றனர்.

நந்தவனங்களில் குமுதம், மல்லிகை, முல்லை, முதலிய மலர்கள் தம் இன்முகங் காட்டிப் போவோர் வருவோரை அழைப்பனபோல் பற்பல நிறங்களைத் தாங்கி அழகாகப் புஷ்பித்திருக்கின்றன. தமது வாசனையை யள்ளிக் காற்றுடன் எங்கும் சொரிகின்றன. 'புன்சிரிப்புக்காட்டி யழைக்கும் வேசியர்'போல் தம்மை தம்மை யழைத்துப்போகும்படி மல்லிகை மலர்கள் மலர்கின்றன. ரோசாப் புஷ்பங்கள் அலர்ந்து விளங்குகின்றன.

தடாகங்களில் குமுதம், செங்கழுநீர், நீலோற்பலம் என்பன தம் நாயகன் வருகின்றானேயென்ற சந்தோஷத்தினால் விரிகின்றன. குமுதநாயகியின் இதழ்களாகிய ஆடைகளைச் சந்திரநாயகன் விலக்கச் தாமரையாகிய பெண் நாணங்கொண்டு கண்களை மூடுகிறாள். சந்திர நாயகனை இன்முகங்காட்டி வரவேற்பதுபோல் குமுத மலர் மலர்கிறது.

சந்திரநாயகன் வரவைத் தோழியாகிய வண்டு நித்திரையிலிருக்கும் நாயகியாகிய குமுத மலருக்குத் தெரிவிப்பதுபோல் மலர்களிற் சென்று வண்டுகள் இன்னிசை பரப்புதலும் மலர்களும் சிறிதுசிறிதாக விரிகின்றன. மலர்கள் விரிந்ததும் சுரும்புகள் அவற்றில் உட்கார்ந்து யாழ் முதலிய இசைக் கருவிகள் தோற்கும்படி இன்னிசை முரல்கின்றன. மலரிலுள்ள தேனைப் பருகுகின்றன. பருகியதும், 'மதுமயக்கத்தாற் பாடும் குடிகாரனை'ப்போல் ஆனந்தத்தால் ரீங்காரம்செய்கின்றன.

சந்திரன் பால்நிலாவை யெங்கும் பொழிந்து கொண்டிருக்கிறான். இளமணத் தம்பதிகள் மகிழ்ச்சியாலே இன்பசாகரத்துள் மூழ்குகின்றனர். சந்திரன் காதலர்களுக்கு நிலவை யூட்டுகின்றான். தலைவனைப் பிரிந்த தலைவியும், தலைவியைப் பிரிந்த தலைவனும், "ஏ, சந்திரனே! நீ பாற்கடலிலே பிறந்த குணம் இல்லாமற்போய்விட்டதே. சிலர் உன்னைத் தண்மதி யென்கின்றனரே. முழுப்பொய். வடவைமுகாக்கினியுடன் பிறந்ததாலோ, ஆலகால விஷத்துடன் பிறந்ததாலோ எம்மைச சுடக் கற்றாய். நீ சந்திரகாந்தக் கல்லை யுருக்கும்போது என்னை யுருக்குவது ஆச்சரியமல்ல. உன்னில் களங்கம் இருப்பதாலன்றோ பாம்பு விஷத்தைக் கக்கியது. விஷத்துடனும் அமுதத்துடனும் பிறந்தபடியாற்போலும் சிலருக்குத் துன்பமும், சிலருக்கு இன்பமும் நல்குகின்றாய். நீ பொல்லாதவனா யிருக்கிறதாற்போலும் சிவபெருமான்கூடத் தன்னிற் றொடர்பில்லாததாகிய சடையில் அணிந்துகொண்டார். இது தகும், தகும்." என்று பலவாறாகக் கூறிச் சோதித்து வருந்தா நிற்கின்றனர்.

மு. கந்தசாமி, (205)
சித்திவிநாயகர் வித்தியாலயம்.

இளைஞர் தேசத்தொண்டு.

உலகத்திற்காகத் தம்மைத் தியாகஞ் செய்கின்றவர்களே தேசத்தொண்டு செய்வர். இத்தொண்டில் இளைஞர் ஈடுபடுவாராயின் இது சாலச் சிறக்குமன்றோ!

தேசத்தொண்டு செய்யத் தொடங்குபவர் தேசத்தொண்டாற்றுமையாய் இருத்தல்வேண்டும். அவர்களுக்கு பொறுமை, இன்சொல்லுடைமை, பழி பாவங்களுக்கு அஞ்சுதல், நிறையுடைமை முதலிய இலக்கணங்கள் இன்றியமையாதனவாகும். சுயநலங் கருதல், பதவி மோகம், பட்டம்பெறக் கருதல் முதலியன வெறுக்கப்படும் இலக்கணங்கள் எனப்படும்.

இந்த இலக்கணங்கள் நன்கமையப்பெற்ற இளைஞர்கள் தேசத்தொண்டு செய்ய முற்படுதலே விரும்பப்படுவதாகும். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனிசிறந்ததாகு மன்றோ! இதை இளைஞர் என்றும் தம்மனத்திற் பதித்துக்கொள்ளல்வேண்டும்.

சீன — யப்பானிய யுத்தத்திலெல்லாம் சீன இளைஞர்கள் தமது தேசத்தைப் பிறருக்கு விடக்கூடாதென எண்ணிப் பெரிதும் முயற்சித்தனர். பண உதவிகொண்டு அல்லது சரீர உதவிகொண்டு தொண்டாற்றலாம். இதிற் சரீர உதவிகொண்டு ஆற்றும் தேசத்தொண்டே சிறந்தது. பெரும்பாலு மித்தொண்டு இளைஞராலேயே ஆகும். ஆகையாற்றான் இளைஞர்தொண்டு சிறந்த தொண்டெனக் கூற முன்வந்தோம்.

இளைஞர்கள் தமது தேசத்தின் கல்வி, சமயம், பொருள் ஆகியவற்றை வளர்த்து வருதல்வேண்டும். மேல்நாட்டு இளைஞர்கள் எண்ணிறந்த சீர்திருத்தங்கள் செய்து வருகிறார்கள். இப்படி நமது இளைஞர்களும் தொண்டு செய்வாராயின் நந்தேயம் சீக்கிரத்தில் முன்னேற்றமடையும். தேசத்தொண்டு செய்பவர் புகழுடம்பு என்றும் அழியாது. இதனாலன்றோ விவேகானந்தர், சுப்பிரமணிய பாரதியார் முதலிய பெரியாரின் பூதவுடம்புகள் அழியப்பெற்றும் புகழுடம்புகள் உலகம் முழுதும் அழியாது பரவியிருக்கின்றன.

என் நம் நாட்டுப் பெரியாரின் புகழுடம்புகள் எத்தனையோ நிலைநிற்பது இன்றும் யாம் அறிந்த விஷயந்தானே. ஆதலின் இளைஞர் யாவரும் தேசத்தொண்டிலீடுபடுவார்களாக.

போ. கனகையா (273)
VII-ம் வகுப்பு,
சரவணபவானந்த வித்தியாசாலை.

ஈழகேசரி கல்வி அனுபந்தம்
தனிப்பிரதி விலை சதம் -- 3
25 பிரதிகள் விலை சதம் — 50
தபாற் செலவு வேறு
ஆண்டுச் சந்தா. ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது.

ஈனத் தருகா டிதுஎமக்கு வேண்டாமென், ஞானத்த நாட்டில் அவதரிப்ப தெந்நாளோ.

இலக்ஷ்மி எங்கிருப்பாள்?

(273-ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை எங்கே?" என்று கேட்டாள். மகள் காணாமற் போன விஷயத்தைச் சொல்லவே இராணி இடியேறுண்ட நாகம்போல் உணர்ச்சியற்று வீழ்ந்தாள். மகளுக்கு அம் முத்துமாலையின் இரகசியம் தெரியாதிருந்ததால், தன் தாய் உணர்ச்சியற்று விழக்கூடிய அவ்வளவு கவலை மிகுதியை நன்கு உணரவில்லை. இராணி மூர்ச்சைபற்று விழுந்த செய்திகேட்டு அரசன் அவசரமாக வந்தான். வந்து தன் மகளிடம் விஷயம் என்னவென்று கேட்க, தன் தந்தையிடம் நடந்த விஷயத்தையெல்லாம் சொன்னாள். தன் மகள் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அரசனுக்குக் காதில் நாராசம் விட்டதுபோல் இருந்தது. அரசனுக்குக் கண்ணீர் மல்கியது. மிகுந்த துயரமான நிலையிலிருந்த தந்தையை நோக்கி மகள் 'விஷயம் புரியவில்லையே' என்று கேட்க, அரசன் ஜோதிஷன் சொல்லியிருந்த விவரத்தைச் சொன்னான். சொல்லிக்கொண்டிருக்கும்போதே அவனது குரல் தளதளத்தது. தொண்டை கம்மிற்று; மார்பு இடையிடையே விம்மிற்று; கண்ணீர் தாரை தாரையாய் வீழ்ந்தது. சிறிது நேரத்தில் அரண்மனை முழுதும் துயரக்கடலில் மூழ்கியது... அரசன் தன் மகளுடைய முத்தாரத்தைக் கொண்டு வருபவனுக்குப் பாதி இராஜ்யமும் இன்னும் விரும்பிய பல வெகுமதிகளும் அளிக்கப்படுமென்று நாடு முழுவதும் தண்டோரா போடச்செய்தான். முத்துமாலை காணாமற்போன செய்தியும் அதைக்கொண்டு வந்து கொடுப்பவருக்கு அரசன் தருவதாகச் சொல்லிய வெகுமதியும் நாடெங்கும் காட்டுத் தீபோற் பரவிற்று. உலகத்தில் பொதுவாக ஆசை யாரை விட்டது? நாட்டிலிருந்த ஒவ்வொருவரும் தனக்குத் தனக்கு அம் முத்துமாலை கிடைத்துவிடக் கூடாதா என்ற பேரவாவே கொண்டிருந்தனர். ஆனால் லக்ஷ்மி போகக்கூடிய இடத்திற்குத் தானே போவாள்!

"அரசகுமாரி தனியே கழற்றி வைத்திருந்த முத்துமாலையை ஒருவரும் திருடிவிடவில்லை. அரண்மனையிலா திருட்டு! அதுவும் உச்சி மத்தியானத்திலா! குளத்தங் கரையிலிருந்த மரமொன்றில் வீற்றிருந்த ஒரு காகம் கண்ணைப் பறிக்கக்கூடிய பளபளப்புடன் கூடின அம் முத்துமாலையைக் கண்டு கீழே பறந்து வந்து வாயில் கவ்விக்கொண்டு ஓடிப் பறந்துவிட்டது. பறந்த காகம் தான் வழக்கமாகப் போகும் ஏழைக் குடியானவன் வீட்டின் தோட்டத்திற்குப் போயிற்று. அப்போது, வழக்கம்போல் குடியானவன் மனைவி காகத்திற்கு அன்னமிட வந்தாள். அவள் அன்னத்தை இட்டதும் பசி மிகுந்த காகம் தனக்கு வேண்டாத முத்தாரத்தைக் கீழே வைத்துவிட்டுத் தனக்கு வேண்டிய அன்னத்தைப் புசித்தது. அந்த முத்தாரத்தைக் குடியானவன் மனைவி எடுத்துப் பத்திரப்படுத்தினாள். பலநாட்களாகத் தான் தவறாமல் சாப்பிட்ட உணவிற்குக் கூலியாகவா, அல்லது அவள் ஒழுங்காக உணவளித்துவந்ததற்கு வெகுமதியாகவா அந்தக் காகம் அந்த முத்துமாலையைக் குடியானவன் வீட்டில் வைத்துச் சென்றது?... லக்ஷ்மி தான் போவதற்குத் தகுதியான இடத்திற்குத்தானே போவாள்!

"குடியானவனிடம் அவன் மனைவி அந்த முத்துமாலை கிடைத்த விதத்தைச் சொன்னாள். பரம ஏழையாகிய அக் குடியானவனுக்கு அளவிலா மகிழ்ச்சியுண்டாயிற்று. பிறவிக் குருடனுக்குக் கண் ஒளி கிடைத்ததுபோல அக்குடியானவனும் பெரிதும் உளங்களித்தான். அந்த முத்துமாலையை அரசனிடம் கொடுத்துத் தான் என்னென்ன வெகுமதிகள் வேண்டலாம் என்று மனக்கோட்டை கட்டலானான். ஆனால் அவன் மனைவி குறுக்கிட்டு அவன் மனோவேகத்தைத் தடுத்துச் சொல்லலானாள்: 'அரசன் எவ்வளவுதான் செல்வம் கொடுப்பதாயிருந்தாலும் அச்செல்வமெல்லாம் ஒருநாளில்லாவிட்டால் இன்னொருநாள் அழிந்துவிடும்; பொருள் சென்றுவிடுவதாலேயே செல்வம் (செல்வோம்) என்ற காரணப் பெயரை யுடையதாயிருக்கிறது. ஆதலால் நீர் அரசனிடம் செல்வம் ஒன்றையும் வெகுமதியாகப் பெறாமல் நான் சொல்லப்போகும் விஷயங்களை அரச கட்டளையாகப் பிறப்பிக்கச் சொல்லும். 1. நாளை மாலை பொழுது சாயும்முன்பே நாட்டிலுள்ள எல்லாக் குடிமக்களும் படுத்துவிடவேண்டும். எங்கும் (கோயிலிற்கூட) விளக்கே ஏற்றக்கூடாது. 2. எல்லா வீடுகளையும், கடைகளையும் மூடிவிடவேண்டும். கோயில்களிலும் அப்படியே எங்கும் பூசை முதலியன ஆகக்கூடாது. 3. வீட்டு வாசல் தெளித்தல், கோலமிடுதல், பாத்திரம் விளக்குதல் முதலியன எதுவும் செய்யக்கூடாது. 4. எங்கும் குதூகலமென்பது இருக்கவே கூடாது. இவையெல்லாம் ஒரே நாட்தான் அரச சட்டமாக அமுலில் இருக்கவேண்டும்' என்று குடியானவன் மனைவி அரசனிடம் சொல்லச் சொன்னாள். மேற்சொன்னவைகளைச் சட்டமாக்குவதனால் வரும் பயனைச் சிறிதும் அறியாதிருந்தாலும் குடியானவன் அவற்றைச் சட்டமாகப் பிறப்பிக்கச் செய்வதையே தான் அரசனிடம் தன் வெகுமதியாக வேண்டுவதென்ற முடிவிற்கு வந்துவிட்டான்!

"அரச சபையிலிருந்த பெருந்திரளான மக்கள் எல்லாரும் அதிசயத்துடனும், பொறாமையுடனும் குடியானவனை நோக்கினார்கள். குடியானவன் தன்னிடமிருந்த அரச குமாரியின் முத்துமாலையை அரசனிடம் சென்று மிக்க பணிவுடன் கொடுத்தான். முத்துமாலையைப் பெற்ற அரசன் தன் ஒரு மகளின் உயிரையே மீண்டும் பெற்றதுபோல நினைத்து மிக்க மகிழ் கூர்ந்தவனாய்க் குடியானவனிடம் அவன் விரும்பிய வெகுமதி என்னவென்று கேட்டான். குடியானவன் தன் மனைவி கேட்கச்சொன்ன விஷயங்களை ஒன்றன்பின் ஒன்றாகச் சொல்லி அவற்றை அரச கட்டளையாகப் பிறப்பிக்க வேண்டுமென்று சொன்னான். அவற்றைக்கேட்ட அரசனும் மற்றைய யாவரும் பெரும் வியப்பெய்தினர். எனினும் எப்பொழுதும் தன் சொற்றவறாத அரசன் இன்றுமட்டும் (அதுவும் தன் மகளுக்கு உயிரையே அளித்தவனுக்கா?) தான் முன்

பொய்க்காட்சி யான புவனத்தை விட்டருளாம், மெய்க்காட்சி யாம்புவனம் மேவுநாள் எந்நாளோ.

காளிதாசரின் கண்ட சுத்தி

—"இயாகி"—

அவள் முகத்தில் பயக்குறி காணப்பட்டது. எதிரே மரக்கிளையிலிருக்கும் காகம் கத்தியதால் ஏற்பட்ட பயம் அது. அவள் பயத்தால் நடுங்கிக்கொண்டிருக்கவில்லை. ஆனால் எதையோ பற்றி ஆழ்ந்து யோசித்துக்கொண்டிருந்தாள்.

ஆம்! அவள் நிர்மதையாற்றுக் கப்பாலுள்ள தன் சோரநாயகனைப்பற்றியே யோசித்தாள். காகம் கத்தியதால் அவனுக்கு என்னென்ன கெடுதி நேரிடுமோ எனப் பயந்தாள். குறியறிவதில் எவ்வளவு சாமர்த்தியம்! சோரநாயகனிடத்தில் எவ்வளவு அன்பு! என்ன பாசம்!.......சீ.

அவள் முகத்தில் பயமும் யோசனையும் ஒரு நொடியில் தோன்றி மறுநொடியில் மறைந்தது. கையில் வைத்திருந்த அரிசியை எதிரே நின்ற பிச்சைக்காரனுக்குக் கொடுத்தாள். ஏன் போசராசனுக்கே கொடுத்தாள். பிச்சைக்கார வேஷத்தில் நின்றபோதிலும் சற்று முன்னால் கொடுத்த வாக்கை மீறுவானா? அதிலும் குடியானவன் கேட்டவைகளோ மிக்க நூதனமானவைகளானாலும் மிக அற்பமானவை. ஆகவே குடியானவன் விருப்பப்படி அவன் வேண்டியவற்றைச் சட்டமாக்கி அவற்றில் ஒன்றையேனும் மீறினால் கடுந்தண்டனை விதிக்கப்படுமென்றும் அவ்விஷயம் எல்லோருக்குந் தெரியும்படி நாடெங்கும் பறையறைவிக்கச் செய்தான்.

"மறுநாள் சூரியனும் உதயமானான். அந்நாடு முழுவதும், பகலவன் உதித்தபின்னும், உறங்குவதுபோலவே இருந்தது. ஒருவிதக் கூட்டமும், கூச்சலும், ஆரவாரமும் இன்றி நிச்சப்தமே குடிகொண்டது. அநேகமாய் மனித நாட்டமேயில்லை என்று சொல்லிவிடலாம். சிறு பிள்ளைகள் விளையாடவில்லை; பெரியவர்கள் குதூகலமாயில்லை. இங்ஙனம் நாடு முழுவதிலும் புன்னகையோ, நகையோ சிறிதுமின்றிப் போயிற்று. வீடுகளின் வாசல்களோ, முற்றங்களோ, வீட்டின் எந்தப்பாகமும் சுத்தஞ் செய்யப்படாமல் விகாரமான தோற்றத்தை அளித்தன. நாள் முழுவதும் கடைகள் திறக்கப்படாமல் கடைத்தெருக்கள் எவ்வித கூட்டமுமற்றுப் பாழடைந்த தோற்றத்தோடிருந்தது. கோயில்களும் அவ்வாறே மூடப்பட்டிருந்தன. மாலை சுமார் நான்குமணிக்கே அரசன் உத்தரவுப்படி குடிகள் தம் படுக்கையைச் சேர்ந்தனர். அன்று நாள்முழுவதும் குடிஜனங்கள் எல்லோருக்கும் தங்கள் தங்கள் பிள்ளைகளை வெளியே செல்லவிடாமல் தடுத்து அவர்களைத் தண்டிப்பதிலேயே பொழுது போயிற்று. சுருங்கச்சொல்லின் அந்த ஒருநாள் அந்த நாடுமுழுவதும் உயிரற்றிருந்ததுபோலிருந்தது.

(தொடரும்)

—ரா. கி. வி.

தோன்றி மறைந்த முக பாவனையைக் கவனியாமல் இருக்கவில்லை போசராசன். * * *

அன்றிரவு மூன்றும் சாமம். எங்கும் இருள் மயமாகவே இருந்ததென்று சொல்லவேண்டியதில்லை. ஏனெனில் அன்று அமாவாசைக்கடுத்தநாள். எல்லாம் அசைவின்றியும், அரவமின்றியும் அமைதியாக இருந்தது. ஆனால் ஒரு பெண்மட்டும் தலையில் முக்காடிட்டுக்கொண்டு, "கைப்பிடி நாயகன் தூங்கையிலே......ஒப்புடன் சென்று பின்வந்து உறங்கும் வஞ்சியை எப்படி நம்புவேன்" என்று சொல்லாமல் ஆழ்ந்த நித்திரையில் கிடக்கும் தன் கணவனை உற்றுநோக்கி, அவன் நித்திரைதானென அறிந்து, கையிலேதோ பலகார பட்சணங்களை ஏந்திக்கொண்டு, அவ்விருளிலுங்கூட யாரும் தற்செயலாய்க் கண்டுவிடுவார்களோ? எனும் அச்சத்துடன் பதுங்கிப், பதுங்கிச் சென்றுகொண்டிருந்தபோதிலும், அவளை இரு கண்கள் கண்டுகொண்டுதானிருந்தன.

ஆம், அவைகள் வேறு யாருடைய கண்களுமல்ல. அதே போசராசனுடைய கண்கள்தான். பகல் பிச்சைக்காரனாகத் தோற்றமளித்தார். ஆனால் இப்போதோ கரிய உடையில் காட்சியளிக்கிறார்.

பல வீதிகளைக் கடந்து சென்றாள் அப்பெண். போசராசனும் அவள்பின்னே சென்றான். ஆனால் அவள் அவனைக் கண்டாளில்லை. சிறிது நேரம் இருவரும் துரிதமாய்ச் சென்றனர். எதிரேயிருந்து வந்த "சல, சல" எனும் ஒலி "இன்னும் நிர்மதை ஆறு ஓடிக்கொண்டேதானிருக்கிறது" என்று சொல்லிற்று.

ஆற்றை அணுகினாள். ஆனால் என்ன?......... பயங்கர சப்தத்துடன் பாய்கின்ற அந்நதியைக் கண்டு பயந்தாளில்லை. அவ்விருளில் பாதையைத் தப்பவிட்டுத் தவித்தாளில்லை. அவ்வாற்றில் முதலை இருக்கிறதே என்று கூட யோசித்தாளில்லை. — சுகப் பேறடையத் துணிந்த மங்கையல்லவா?

ஆற்றைத் தாண்டினாள். தன் சோர நாயகனைச் சந்தித்தாள். "பேசினாள்": திரும்பினாள்.

இதுவரை இக்கரையில் காத்துப் பதுங்கிக்கொண்டிருந்த இராசா அவளைப் பின் பற்றிவந்து, பின் அரண்மனைக்குச் சென்று, காலையில் கவி காளிதாசரை நோக்கி, "பகற் போதிலே காகத் தொனியாற் பயந்தவள்", எனும் கருத்துள்ள ஓர் சுலோகத்தைச் சொல்ல கவி "இராத்திரியிலே நிருமதையாற்றைக் கடக்கின்றாள்" எனும் பாகத்தைச் சொன்னார். பின் போசன் "அந்தச் சலத்திலே முதலைகள் இருக்கின்றன", என்று சொல்ல "அவளோ குறியறியும் சாமர்த்தியமுள்ள சுந்தரி" என்றார் கவி.

இதை எவ்வளவழகாக சுன்னாகம் குமாரசாமிப் புலவரவர்கள் பாடியிருக்கிறார் பாருங்கள்.

> "பகற்போது காகத் தொனியாற் பயந்தவள் பற்றிருளிற்
> சுகப்பே றடைய நிருமதை தாண்டுவள் சூழ்த்தவன்மீன்
> மிகப் போதிபமட்டு நிர்மதை யாற்றின் மிசையுளதால்
> உகப்பேறு நண்பன் குறியறி சூரியல் வொண்டொடியே"

ஆதியந்தங் காட்டாமல் அம்பரம்போ லேநிறைந்த, நீதி லருட்கடலைச் சேருநாள் எந்நாளோ.

ராமுச் சன்யாசி

அதோ அந்தச் சன்யாசியின் தலை நன்றாய் நரைத்துத்தான் விட்டது. அவர் தாடியும் வெள்ளிக்கம்பிகள் போலப் பிரகாசிக்கின்றனதான். காதிலணிந்திருந்த குண்டலங்களவர் திரும்பும் போதெல்லாம் அங்குமிங்கும் ஆடிக்கொண்டிருந்தன. அந்த மகானுபாவர்தான் என்ன செய்துகொண்டிருக்கின்றார்? தாடியை முறுக்கியபடியே ஏதோ போதனைசெய்து கொண்டிருக்கிறார். அல்லாவிடில் ஏன் இவ்வளவு பெருந்திரளான ஜனங்கள் அவரைச் சுற்றி நின்று கொண்டிருக்கின்றனர். ஆம் அவர் போதிக்கின்றார்தான். சந்தேகமில்லை.

* * * *

களனிகங்கைக் கரையிலே யுள்ளது ஓர் சின்னஞ் சிறு குடிசை. இதில்தான் ராமு வசிப்பவன். அவன் அன்றாடம் உழைத்துச் ஜீவனஞ் செய்பவன். இல்லவே இல்லை. கள்ளுக் கடைக்குக் கொடுத் தெஞ்சியதைக் கொண்டே மிகக் கஷ்டமான ஜீவனஞ் செய்பவன். ஒருநாள் நல்ல ஜாமமிருக்கும். ராமு கள்ளுக்கடையால் திரும்பினபாடில்லை. அவன் மனைவி பகல்முழுவதும் அவனிடம் வலிக்க வலிக்க வேண்டிய அடியாலும், உதையாலும், தன்னையே மறந்து நிம்மதியாய்த் தூங்கிக்கொண்டிருந்தாள். தாயின் துயிலுக்குக் குழந்தை இடையிடையே பங்கஞ் செய்துவந்தது. இதற்குக் குழந்தையின் முதிர்ந்த சுரந்தான் காரணம். பாவஜென்மங்கள். காசிருந்தால்தானே வைத்தியரை அழைத்துவந்து பிள்ளையின் நோயை மாற்றமுடியும். இவையெல்லாவற்றையும் சிந்தித்துத்தான் ராமுவின் மனைவி துக்கசாகரத்தின் கரையைக் கண்டபடியே இருந்தாள். தற்போதைய துர்லபமான நிலையை எண்ணும்போதெல்லாம் தன் முன்னைய உன்னத ஸ்திதியின் எண்ணங்களெல்லாம் அவள் மனக்கண்முன் ஓடி மறையும். இன்னும் தன் யௌவன பிராயத்திய மனக்கோட்டை எல்லாம் இப்போது 'பொலுபொலெ'ன உதிர்ந்துவிழுவதைப் பார்க்க அவளையறியாமலே அழுகைத்தொனி வாயைப் பீறிக்கொண்டு புறப்படும். இத்தருணங்களிலெல்லாந் தன் ஆம்படையானை உள்ளூர ஏசுவாள். ஏன் அவள் ஏசுவதற்குக் காரணங்களிருக்கத்தான் செய்கிறது. அப்பா அகத்திலிருந்து தான் கரங்களுக்கு 'அழகுபடுத்திப் போட்டுவந்த ஜோடிக் கடகங்களை ராமு மா. சி. வின் கள்ளுக்கடைக்குக் கொடுத் தழித்துவிட்டானென்பதுதான் அவளை வாட்டிய முக்கிய காரணம். இது 'அவளது மனக்கோட்டையின் அரைவாசிப் பகுதியைத் தகர்த்துவிட்டது என்றுதான் கூறலாம்.

நாட்கள் மாதங்களாகிக்கொண்டே வந்தன. பிள்ளையின் கடுஞ் சுரமும் அதிகரித்துக்கொண்டே வந்தது. ராமு தன் பழைய திருவிளையாடல்களிற் சொற்பமேனுங் குறைந்தபாடில்லை. அவன் மனைவி தன் அகமுடையானின் அபூரிமித கட்குடியைத் தடுப்பதற்குத் தன்னாலான பகீரதப் பிரயத்தனங்களுஞ் செய்து பார்த்தாள். இவளது ஜம்பம் ராமுவிடமா பலிக்கும்? ஒருபோதுமில்லை.

நடுநிசி; எங்குமந்தகாரம் அரசு செலுத்தியது. ராமுவின் குடிசையில் ஓர் அரிக்கன் லாந்தர் மின்னிமின்னி எரிந்துகொண்டிருந்தது. மழையோ சோனாவாரியாய்க் கொட்டிக்கொண்டிருந்தது. கடந்த இரு இரவுகள் போல 'விர்'ரென்று வீசும் புயற்காற்றின் வேகத்தால் கங்கைக்கரை மரங்களிற் பல பதட்டமடித்துக்கொண்டிருந்தன. இடி பயங்கரமாக இடித்தது. 'பளீர் பளீ'ரென்று மின்னல் மின்னிற்று. மழையில் நனைந்துகொண்டிருந்த ஆந்தையொன்று அச்சத்தொனியில் அலறிக்கொண்டிருந்தது. ஓர் மங்கையின் விம்மிய அழுகைத்தொனியும் மழையோசையுடன் கலந்துகொண்டுதானிருந்தது. அம்மங்கைதான் யாராயிருக்கலாம்? வேறு யாருமில்லை, குடிகார ராமனின் ஆம்படையாள்தான். அவள் அந்தக் கிழிந்த துப்பட்டியை எடுத்துத் தன் இன்னுயிரனைய குழந்தையின் மேனியை மூடினாள் குளிரொட்டாமல். அன்றிரவுதானும் ராமு குடிசையில் இருந்தால்தானே. அவன் கள்ளுக்கடையிற் தங்கினானோ அன்றிச் சீட்டாட்டத்திற்காக எங்கேயாவது சென்றானோ நாமறியோம்.

அதே இரவு, சுமார் மூன்றரை மணியிருக்கும். 'அம்மா' என்றது குழந்தை. அவ்வளவுதான் கண்களை மூடிற்று. சிறிதுநேரம் அவள் இறந்த தன் குழந்தையுடன் கட்டிப்புரண்டாள். நிலத்தில் தன் மண்டையைப் 'படார், படார்' என்று மோதினாள். ஓவென்றரற்றினாள். மறுநிமிடம் ஏதோ யோசனை தோன்றியவள்போல் களனி கங்கைக்குச் சமீபஞ் சென்றாள். அடுத்தவினாடி 'லபக்'கென்றொரு சப்தம் தண்ணீரைக் கிழித்துக்கொண்டெழுந்தது. கடலலைகள் பெரியகப்பல்கள் நீரில் மூழ்கி அமிழ்ந்தபின் எவ்வித கலவரமும் இன்றி ஓடிக்கொண்டிருக்கின்றனவோ அதேபோலக் களனிகங்கையு மோடிக்கொண்டிருந்தது.

'பல பல' வென்று விடியுஞ் சமயம். மழையுஞ் சிறு தூற்றல்கள்போட ஆரம்பித்துவிட்டது. ஜலப்பிரவாகங் கரைகடந்தோடிக் கொண்டிருந்தது. ராமு தன் குடிசையில் வந்து கண்ட காட்சிதானென்ன? அவனுக்கப்போது என்னமாதிரி இருந்திருக்குமென்பதை நேயர்களே ஊகித்தறிந்துகொள்ளுங்கள். களனிகங்கைக்கரையில் தன் மனைவியை வள்ள ஓட்டிகள் கொண்டுவந்து போட்டுவிட்டு நிற்குங் காட்சி அவனைப் பயித்தியம் பிடித்தவன்போலாக்கிவிட்டது. அப்போதுதான் தன் கட்குடியின் கெடுதலை உணர்ந்தான் ராமு. என்ன செய்வான் பாவம்! எல்லாம் விதியின் பயன். அன்று சாயந்தரமே தாயுங் குழந்தையும் ஓரிடத்தில் தகனஞ் செய்யப்பட்டனர்.

* * *

ராமு இப்பிரபஞ்ச வாழ்க்கையை முற்றாக நிராகரித்துவிட்டான். அவன் தன்னைக்கெடுத்த கட்குடியை மனமார வெறுத்துப் பத்து வருடங்கள் பறந்துவிட்டன. நீதிசாஸ்திரம் பல கற்று, அவனிப்போது பெரிய

எட்டுத் திசைக்கீழ்மேல் எங்கும் பெருகிவரும், வெட்டவெளி யென்னறிவே மெய்த்தெய்வ மெந்நாளோ

விளக்குச் சொல்லிய சுய சரிதம்

(மணி)

இரவு பத்துமணி இருக்கலாம். நான் எனது சயன அறையில் படித்துக்கொண்டிருந்தேன். எனது மேசையில் ஒரு சாதாரணமான "லாந்தர்" விளக்கு, அன்று தான் கடைசிமுறையாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. ஏனெனில், நாளைமுதல் "எலெக்ற்றிக்லைட்" வரப்போகிறது. எனக்கு அது மகிழ்ச்சியைக் கொடுத்தாலும், என்னிலும் கூடிய மகிழ்ச்சியை அடைந்தது விளக்கு என்று தான் சொல்லவேண்டும்.

"நண்பா" என்று யாரோ அழைத்தது என் செவியில் பட்டது. திடுக்கிட்டு எழுந்து சுற்று முற்றும் கவனித்தேன். அவ்வறையில் என்னைத்தவிர வேறுயாரும் இல்லை.

'என் மிரளுகின்றாய்; இங்கேபார்" என்று அதே குரல் மீறுபடியும் கேட்டது. மேசைமேல் இருந்த விளக்கைக் கவனித்தேன். என்ன ஆச்சரியம்! அதற்கு இப்பொழுது மனிதர்க்கு இருப்பதுபோல் தலை, கால், கை, கண், வாய், மூக்கு எல்லாம் காணப்பட்டன. நீங்கள் எங்கேயாவது விளக்குப் பேசியதைக் கண்டதுண்டா? அல்லது கேட்டதுண்டா? ஆகவே நானடைந்த ஆச்சரியத்திற்கு அளவில்லை. ஆனால் அவ்விளக்கோ என்னைப்போல் திகைத்து நிற்காமல் ஏதோ சொல்லிக்கொண்டேபோயிற்று. அது சொல்லியது அதன் சுய சரிதம் தானென்பதைப் பின்னால் தெரிந்துகொண்டேன்.

"நீ இப்போது என்னைப்பார்த்துக் கலவரமடைந்திருக்கிறாய். நான் இன்றுடன் இவ்விடத்தை விட்டு அகலப்போகிறேன். அதன் முன் எனதும், எனது சகோதரரதும் சரிதத்தைச் சொல்கிறேன், கவனமாய்க்கேள்." என்று சொல்லி நிறுத்திற்று. நானும் உற்றுக் கேட்கத்தொடங்கினேன். அது மேலும் சொல்லத்தொடங்கியது.

"நாங்கள் பழையகாலந்தொட்டே இவ்வுலகில் இடம் பெற்றுவிட்டோம். எங்கள் சரிதமும் மிகப்பழையது. எந்தநேரமும் இப்பூலோலகத்தின் ஏதாவது ஒரு பகுதி இருளில் ஆழ்ந்திருக்குமல்லவா? அப்பொழுது அவ்விடத்தில் நாங்களின்றேல் உணவைச்சமைத்து உண்ணவோ அல்லது பொருட்களை எரிக்கவோ முடியாது. ஒரு பொருளும் கண்ணுக்குத் தோற்றமாட்டாது. சுருங்கச்சொன்னால் அப்பொழுது நாங்களின்றி ஒரு கருமமும் செய்ய முடியாது. ஆகவே, உலகம் எப்பொழுது தோன்றியதோ அன்று முதற்கொண்டு ஜீவராசிகள் எங்களை அத்தியாவசியமான பொருட்களில் ஒன்றாகக் கருதுகின்றன.

மிக ஆதிகாலத்தில் வாழ்ந்த அநாகரிக மக்கள், மரத்தைக்கோல்கொண்டு கடைந்தும், "சிக்கிமுக்கி" என்ற ஒருவித கல்லை ஒன்றோடொன்று தேய்த்தும் எங்களைப் பெற்றனர். சிறிதுகாலம் நாம் அப்பருவத்திலேயே கழித்தோம்.

அதன் பின் நடக்கும்பருவம் எங்களைக்கிட்டிற்று. மெழுகினால் செய்யப்பெற்று திரியிடப்பட்ட (மெழுகு திரி)வீட்டின் நடுவில் வசிக்கத் தொடங்கினோம். தேவைப்பட்ட இடங்கட்கெல்லாம் நாங்கள்கொண்டுபோகப்பட்டோம். அந்தக்காலத்தில், "ஜூலியஸ் ஸீசர்," "ஒகஸ்தஸ் ஸீசர்'," ஹொறேசியஸ்," போன்ற தேச வீரர்களின் இல்லங்களிலும், வெற்றிப்பிரவேச ஊர்வலங்களிலும் ஜோதிமயமான பிரகாசத்தை நல்கி அழகுபடுத்தினோம். எங்கட்கிருந்த மதிப்புக்களவேயில்லை. அதனால்தான் முஸ்லிம் விழாக்களில் நாங்கள் இன்றும்காணக்கிடக்கின்றோம்.

கீழ் நாடுகளிலே களிமண் அகல்களில் ஆமணக்கெண்ணெய் நடுவிலிருந்து இல்லங்கட்குச் சிறப்பை நல்கினோம். இவ்வாழ்வு நெடுங்காலம் நீடிக்கவில்லை. ஐரோப்பியர்கள் சிலரால் மண்ணெண்ணெய், பெற்றோல் முதலியவை கண்டுபிடிக்கப்பட்டன. அதனால் எமக்கு, இப்போதிருப்பதுபோல் தகரத்தாலும், கண்ணாடியாலும் (சிம்னி) செய்த உடைகளைக் கொடுத்து அழகுபடுத்தினர். ஜெர்மனி முதலாமிடங்களில் நாங்கள் ஏராளமாக உற்பத்தியாகி பிறநாட்டுக்குச்சென்றோம். கோவில்களில் தேங்காயெண்ணெயைக் குடித்து வளர்ந்தோம். எமக்கு அதிர்ஷ்டயோகம் இவ்வளவில் நின்றுவிடவில்லை.

மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டது. நாம் இன்னும் உயர்நிலை அடையத்தொடங்கினோம். வீதிகளையெல்லாம் பால் நிறம்போற் பிரகாசிக்கச் செய்தோம். ஒவ்வொரு நகரமும் இந்திரலோகம் போற்றிகழச்செய்தோம். பூரண சந்திரனது நிலவுகூட எமக்கு வெட்கித் தலைகுனிந்தது என்றால் எமது பிரகாசத்தைக் கேட்கவும் வேண்டுமோ? அவ்வித பிரகாசத்துடன் நாளைக்கு இவ்வறையில் திகழப்போகின்றேன் என்பதை நினைக்க எனது மகிழ்ச்சியைத் தாங்கமுடியவில்லை." இவ்வாறாகக் கதை சொல்லி முடித்ததும் அவ்விளக்கு அணைந்து விட்டது. அறை முழுவதும் ஒரே இருள்.

திடுக்கிட்டுக் கண்ணை விழித்தேன். உண்மையாகவே விளக்கு அணைந்துவிட்டது. மறுபடி விளக்கையேற்றினேன். அதற்கு இப்பொழுது காலுமில்லை கையுமில்லை. புத்தகம் மேசையில் விரித்தபடி இருந்தது. நான் கண்டதும் கேட்டதும் கனவில்தான் என்பதையறிய ஐந்து நிமிஷங்கள் சென்றன. எதிரே இருந்த "விளக்குகள்" என்ற தலையங்கம் கொண்ட கட்டுரையை வாசித்துக்கொண்டே தூங்கியதன் பலன்தான் இது என்று சொல்லவும் வேண்டுமா?

சன்யாசியாகிவிட்டான். பிரசங்கங்களிலும் போதனைகளிலுமே தன் நேரத்தைச் செலவுசெய்து வந்தான். கதைத் தொடக்கத்தில் கூறிய சன்யாசிதான் நம் ராமுச்சன்யாசி யென்று நாமிப்போது சொல்லவேண்டியதில்லையல்லவா?

மா. குகராசா (199)
J. S. C. மாணவன்,
தெல்லிப்பழை, மகாஜன ஆங்கில வித்தியாசாலை.

சூதானமென்று சுருதியெல்லாம் ஓலமிடும், ஈதான மானவெற்பை மேவுநாள் எந்நாளோ.

காலத்தினருமை

இவ்வுலகில் உள்ள மாந்தரிற் சிலர் வறியவராக வும், சிலர் செல்வந்தராகவும், சிலர் கல்விமான்களாகவும், சிலர் முழுமூடராகவும், பலர் வலிமையுடையவராகவும், சிலர் பேடிகளாகவும் இருப்பதை நாம் காண்கிறோமல்லவா? இதற்குக் காரணம் யாதென்பதை ஆராய்ந்து பார்ப்போமானால் அவர்கள் காலத்தின் அருமையை அறிந்து அம்முறையைக் கைக்கொண்டொழுகாமையே.

காலம் என்பது ஒரு சாதாரணமான பொருளன்று. அது எல்லாப் பொருள்களிலும் மேலானது. காலத்தின் பகுதிகளாகிய ஒவ்வோர் நொடிப்பொழுதும் நம்மாற் போற்றத்தகுந்தது. காலத்தை அவமதிப்பவன் இவ்வுலகில் ஒருபயனையும் பெறமாட்டான். தேனீக்களைப் பார்த்தால், 'அவை இடைவிடாமல் உழைத்துச் சேகரித்த தேன் நமக்கு எவ்வளவு பயனைக் கொடுக்கின்றது. அவையும் காலத்தை வீணாக்காமலே உழைக்கின்றன. ஆதலால் ஆறறிவுடைய மாந்தராகிய நாங்கள் காலத்தைப் பொன்னேபோற் பேணி நடக்கவேண்டும். நாம் நமது வாழ்க்கையிற் பயன்படுத்தாமற் கழித்துவிட்ட நாட்களை மறுபடி அடைய முடியுமா? "அணைகடந்தவெள்ளம் அழுதாலும் வாராது," என்றபடி கழிந்தகாலத்தைத் திரும்ப நாம் பெறமுடியாது. சிலர் காலத்தின் பெரும்பகுதியை வீணிற் கழித்துவிடுகின்றனர். பின் ஒருகாரியத்தைச்செய்யத் தொடங்கி அதைமுடிக்கக் காலம் போதாமையால் ஐயோ! நாம் மோசம்போனோமே! என்று கண்ணீர் பெருக்குவர்.

நாம் காலத்தைப் போற்றிவர இளமையிலிருந்தே பழகிவரல்வேண்டும். ஒருவன் தினந்தோறும் பதினைந்து நிமிஷம் படித்து வருவானாயின் அவன் பதினைந்து வருடங்களிற் சிறந்த பண்டிதனாவான் என்றோர் ஆங்கில அறிஞர் கூறியிருக்கின்றார். பெரிய மேதாவிகளெல்லாம் காலத்தைச் சரியானமுறையின் உபயோகித்தவர்கள் என்பதை மறக்கக்கூடாது. மாணவர்களிற் சிலர் உபாத்தியாயர் சொல்லிக் கொடுப்பதை அப்போதைக் கப்போது படித்துக் கொள்வதில்லை. இன்றைய பாடத்தையும் நாளைய பாடத்தையுஞ் சேர்த்து நாளைக்குப் படிக்கலாம் என்று எண்ணுகின்றனர். இது பெருந்தவறு. நாளை என்பது என்றும் இல்லை என்பதற்குச் சமனாகும். நாள் தோறுங் கவனமாகப் படிக்கிற எவனும் பரீட்சையிற் தவறமாட்டார். கபிலரும்:—

ஒன்றே செய்யவும் வேண்டும்; ஒன்றும்
நன்றே செய்யவும் வேண்டும்; நன்றும்
இன்றே செய்யவும் வேண்டும் இன்றும்
இன்னே செய்யவும் வேண்டும்."

என்று கூறியிருப்பதை நாம் மறத்தலாகாது.

சிலர், எங்களுக்கு அதைச்செய்ய நேரமில்லை; இதைச்செய்ய நேரமில்லை; என்று காலத்தின்மேற் குறை கூறுவது வழக்கம். அப்படிச் சொல்லுகிறவர் காலத்தைத் தகுந்தபடி வகுத்துக் கொண்டு ஒருவேலையைச் செய்யத் தொடங்குதல் வேண்டும்.

சீ. நடராசா (259)
உடுவில் தெற்குச் சைவவித்தியாசாலை

விண்ணப்பப் பத்திரம்

திகதி..............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [இந்தியா 2 அணு; மலாயா 16 காசு.]

பெயர்..............................

பிறந்த திகதி..................மாதம்..................வருடம்..................

விலாசம்..............................

....

பெற்றோர், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ....

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு: இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூப்பனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வெறுங் காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந்த நிபந்தனை கிடையாது]

யாழ்ப்பாணம்—மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' நூன் திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஜூலாய்மீ 2உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.